# <u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>

**<u>அ.வ எண்: 231/2024 (வாசா.1 – மதன்மோகன்) தேதி:27.01.2026</u>**

**<u>வாசா.1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 2 முதல் 4, 7,8,16,32,40,41,43,64 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கிற்கு நான்தான் விவரம் கூறினேன். இந்த வழக்கில் கண்ட இதர வாதிகளுக்கும் எனக்கும் சம்பந்தம் உள்ளதா என்றால் அவர்களுக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கில் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2022ம் வருடம் நாடார் உறவின்முறை சங்கத்தில் நடைபெற்ற தேர்தல் செல்லாது என்பதற்கும் மறுதேர்தல் நடத்துவதற்கும் தாக்கல் செய்துள்ளேன். தேர்தல் நடைபெற்றது செல்லாது என்றுதான் பரிகாரம் கோருகிறேன். கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் உறுப்பினர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா அல்லது தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் உறுப்பினர் என்ற முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது உறுப்பினர் எண் 3695 ஆகும். இதர வாதிகளின் உறுப்பினர் எண்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் கண்ட இதர வாதிகள் எனக்கு உறவினர்கள் கிடையாது, பழக்கமானவர்கள். கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்படும் என்றால் சரிதான். எனக்கு வழங்கப்பட்ட உறுப்பினர் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்திற்கு தலைக்கட்டு வரி மற்றும் உறுப்பினர் சந்தா செலுத்தியதை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 2019ம் வருடம் முதல்

கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். நான் உறுப்பினராக சேர்ந்த பின் 2022ம் வருடம்தான் தேர்தல் நடைபெற்றது. கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் தேர்தல் எவ்வாறு நடைபெறும் என்பது 2022ம் வருடம்தான் நான் முதன்முதலில் பார்த்தேன் என்றால் அந்த தேர்தலில்தான் நான் ஓட்டு போட்டேன், ஆனால் தேர்தல் எவ்வாறு நடைபெறும் என்ற விவரம் ஏற்கனவே எனக்கு தெரியும். மேற்படி தேர்தலில் நான் தேர்தல் முகவராக பணிபுரிந்தேன். மேற்படி தேர்தலில் மீன் சின்னத்தில் போட்டியிட்ட அணிக்காக நான் தேர்தல் முகவராக பணிபுரிந்தேன். நான் முகவராக பணிபுரிந்த மீன் சின்ன அணி அந்த தேர்தலில் தோல்வி அடைந்து விட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ட 1 முதல் 65 பிரதிவாதிகள் மீன் சின்ன அணியில் போட்டியிடவில்லை என்றால் சரிதான், அவர்கள் யானை சின்னத்தில் போட்டியிட்டார்கள். அந்த நபர்கள்தான் தேர்தலில் வெற்றி பெற்று நிர்வாக குழுவில் உள்ளார்கள் என்றால் இல்லை. பிராதில் 1 முதல் 65 பிரதிவாதிகள் நிர்வாக குழுவில் செயல்பட்டு வருவதாகதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்கள் செயல்பட கூடாது என நான் கூறியுள்ளேன். 25.12.2022 தேதியில் நடைபெற்ற சங்க தேர்தலுக்கு தேர்தல் அறிவிப்பு எந்த தேதியில் வெளியிடப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த தேர்தலுக்கு நாமினேஷன் தாக்கல் செய்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் அந்த தேர்தலில் போட்டியிட்ட எனது தாய்மாமா எம். இளங்கோ என்பவருக்கு நான் வழிமொழிந்தேன். தேர்தல் அலுவலர் முன்பாகதான் நான் அவ்வாறு வழிமொழிந்தேன் என்றால் சரிதான். எனது மாமாவின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் இல்லை. நிராகரிக்கப்பட்டது. அதனால் தேர்தல் நடைமுறைகள் பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு தேர்தல் அலுவலர் முன்பாக வழிமொழிந்த போது தேர்தலை நடத்த கூடாது என நான்

ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 21.12.2022 தேதியில் நான் அவ்வாறு ஆட்சேபணை செய்தேன். நான் எனது தாய்மாமாவிற்காக தேர்தல் அலுவலர் முன்பாக வழிமொழிந்த தேதி எனக்கு ஞாபகமில்லை. தேர்தல் அலுவலரிடம் வாய்மொழியாகதான் ஆட்சேபணை தெரிவித்தேன். நான் அவ்வாறு ஆட்சேபணை தெரிவித்தது சம்பந்தமாக சாட்சிகள் யாராவது உள்ளார்களா என்றால் இல்லை. 23.11.2022 தேதியில் தேர்தல் நடைமுறை குறித்த நாளிதழ் விளம்பரம் வந்துவிட்டது என்றால் எனக்கு தெரியாது. வேட்பு மனு தாக்கல் 07.12.2022 தேதியில் முடிவடைந்து விட்டது என்றால் சரிதான். அன்றைய தினம் நான் ஆட்சேபணை செய்யாமல் தேர்தலுக்கு 4 நாட்கள் முன்பாக ஆட்சேபணை செய்துள்ளேன் என்றால் தேர்தலுக்கு 4 நாட்கள் முன்பாகதான் தேர்தல் அலுவலர் 44 நபர்களின் வேட்பு மனுக்களை நிராகரித்ததால் நான் ஆட்சேபணை செய்தேன். வேட்பு மனுக்கள் நிராகரிக்கும் வரை தேர்தல் நடைமுறைகளை நான் ஆட்சேபணை எதுவும் செய்யாமல் அந்த நடவடிக்கைகளை ஒப்புக்கொண்டு இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆட்சேபணை தெரிவித்ததாக நான் கூறிய பின்புதான் சங்க தேர்தல் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த தேர்தலிலும் நான் ஒரு முகவராக பணியாற்றினேன் என்றால் சரிதான். அந்த தேர்தலில் நானும் வாக்களித்தேன் என்றால் சரிதான். என்னை தவிர இதர வாதிகள் அந்த தேர்தலில் தேர்தல் முகவராக செயல்பட்டார்களா என்றால் எனக்கு தெரியாது. என்னை தவிர இதர வாதிகள் அந்த தேர்தலில் வாக்களித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் தேர்தலில் வாக்களித்துள்ளேன் முகவராக செயல்பட்டுள்ளேன் என்ற முறையில் தேர்தல் நடைமுறைகளை நான் ஒப்புக்கொண்டுதான் செயல்பட்டு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்தரவின்படி கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்திற்கு 2014ம் வருடம் நீதிமன்ற ஆணையர் முன்பாக தேர்தல்

நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. அந்த தேர்தலிலும் 2022 ம் வருட தேர்தல் நடைமுறைகள் தான் பின்பற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2014 ம் வருட தேர்தலில் இந்த வழக்கில் கண்ட 67 வது பிரதிவாதி உதவி தேர்தல் அலுவராக செயல்பட்டார் என்றால் எனக்கு தெரியாது. அதனால் நான் கூறியவாறு தேர்தலில் எவ்வித விதிமீறல்களும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.